முருகப்பெருமான் துணை

**மகான் ஜமதக்னி அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

22.11.2022, செவ்வாய்கிழமை

1. காக்கும் சக்திமிகு அரங்கனே
   கருணையே வடிவான தேசிகனே
   தேக்கமின்றி உலகம் எங்கிலும்
   தேசிகனுன் தெய்வ நெறிபரவ
2. பரவவே உலகமாற்றம் தானும்
   பழுதில்லா நடந்தேறுமெனக் கூறி
   தரணியில் அனுகூல ஆசி தனை
   தக்க சுபகிருது தேள் திங்கள்
3. திங்களிலே சஷ்டிதிகதி குசன்வாரம்
   (சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 06 ம் நாள் 22.11.2022, செவ்வாய்கிழமை)
   தெரிவிப்பேன் ஜமதக்னி யானும்
   இங்கனமே ஞான உலகு அமைய
   இயம்பிடுவேன் அரங்க ஞானி கேட்க
4. கேட்கவே சன்மார்க்க நெறி
   குவலயத்தில் எங்கும் பரவிட
   தட்டாது ஞானவான்கள் எனும்
   தனித்துவ சக்தி பெருகி
5. பெருகியே யாவர்க்கும் பாதுகாப்பு
   பெருமைமிக்க வாழ்வுமாக மாறி
   தருமம் வளர்க்கும் தயவும்
   தன்னார்வத் தொண்டு மிகுந்த
6. மிகுந்த உலக மக்களாகி
   மேலவர்கள் தானும் மெச்ச
   தகுந்த ஞானலோக மாற்றம்
   தரணி கண்டு நிறைவுபெறும்
7. நிறைவான ஞானிகள் வெளிப்பாடு
   நிலவுலக மக்களிடை கண்டு
   குறைகள் பாதகங்கள் இல்லா
   குழப்பம் குரோதம் கொலை வஞ்சமில்லா
8. வஞ்சமில்லா தரும ஞானபலமிக்க
   வல்லமையான ஞானபூமியாக
   தஞ்சமென உலகம் மாறி
   தவராஜன் அவதார நோக்கமாக
9. ஆகவே ஞானயுக மாற்றம்
   ஆறுமுகன் தலைமை ஏற்று
   வகையான ஞானிகள் நிறைந்த
   வளம்தரும் ஞான ஆட்சி மலரும்

10. மலரவே மக்களெல்லாம் தேற்றம்
மாதவப் பலனாக அடைந்து
வளருமே எங்கும் எதிலுமே
வள்ளல்தன்மை நிறைந்து

11. நிறைந்துமே தீவினை அகற்றி
நீதிமான்களாக ஞானிகளாக
நிறைந்துமே உலகோர் சிறப்பர்
நிகழ்த்திய அனுகூல ஆசி முற்றே

—சுபம்—